3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) முன்பண மானியக் கோரிக்கைகள், 2002-2003, மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002-2003 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 206, read with Clause 3 of Article 203, of the Constitution of India, I, P.S. Ramamohan Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the financial year 2002-2003."

6. முன்பண மானியக் கோரிக்கைகள், 2002-2003, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002-2003 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002-2003 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27-3-2002 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை, 2002-2003 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

TRUTH ALONE TRIUMPHS